# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின்
# வர்த்தமானப் பத்திரிகை

**_2021 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 22 ஆம் திகதிய_**
**_பகுதி II இற்குக் குறைநிரப்பி_**

*(2021.10.28 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*


## மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (திருத்தம்)

**_1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க, மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்_**

*வர்த்தக அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*


இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன் பற்றிய கூற்று**

**வாசகம் 2** : இவ்வாசகம், (இதனகத்துப்பின்னர், ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க, மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டத்தை திருத்துவதுடன், திருத்தத்தின் சட்டப்பயனானது, ''மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டம்'' என்னும் சொற்களை, ''லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டம்'' என்னும் சொற்களைக்கொண்டு மாற்றீடு செய்வதற்காகும்.

**வாசகம் 3** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தையும் வேறு எழுத்திலான சட்டங்களையும் திருத்துவதுடன் திருத்தத்தின் சட்டப்பயனானது, பின்வருமாறு சொற்களை மாற்றீடு செய்வதற்காகும்:-

(அ) ''மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டம்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டம்'' என்னும் சொற்களை இடுதல்;

(ஆ) ''மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்விப் புலமைப் பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்'' என்னும் சொற்களை இடுதல்.

**வாசகம் 4** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, நிதியத்தின் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபையின் அமைப்பை மாற்றுவதற்கும் மற்றும் சபையின் தவிசாளராக உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற நீதிபதி ஒருவரை நியமிக்க ஏற்பாடு செய்வதற்குமாகும்.

**வாசகம் 5** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துவதுடன், திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, அப்பிரிவின் ஏற்புடைமையை நிதியத்தின் நம்பிக்கைப்பொறுப்பாளர்களுக்கும் நீடிப்பதற்காகும்.

**வாசகம் 6** : இவ்வாசகம், முதன்மைச் சட்டவாக்கத்தின் 15அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துவதுடன் திருத்தப்பட்டவாறான அப்பிரிவின் சட்டப்பயனானது, 1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பகிரங்க ஆதனத்துக்கெதிரான தவறுகள் சட்டத்தின் ஏற்பாடுகளை நிதியத்தின் ஆதனங்களுக்கும் ஏற்புடையற்பாலனவாக ஆக்குவதற்காகும்.

## மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம் (திருத்தம்)

*ச.வ.- ஓ. 5/2020*

### 1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க, மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக:-

சுருக்கப் பெயர்

**1**. இச்சட்டம், 2021 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதிய (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்கச் சட்டத்தின் விரிவுப்பெயரைத் திருத்துதல்*

**2**. (இதனகத்துப்பின்னர், ''முதன்மைச் சட்டவாக்கம்'' எனக் குறிப்பீடு செய்யப்படும்) 1981 ஆம் ஆண்டின் 66 ஆம் இலக்க, மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டத்தின் விரிவுப்பெயர், ''மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தைக்'' என்னும் சொற்களுக்குப் பதிலாக, ''லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியத்தைக்'' என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

முதன்மைச் சட்டவாக்கத்துக்கும் வேறு எழுத்திலான சட்டத்துக்குமான பொதுவான திருத்தம்

**3**. (1) முதன்மைச் சட்டவாக்கத்திலும் வேறு ஏதேனும் எழுத்திலான சட்டத்திலும்-

(அ) ''மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்" என்னும் சொற்களுக்குப் பதிலாக, அத்தகைய சொற்கள் முதன்மைச் சட்டவாக்கத்திலும் வேறு எழுத்திலான சட்டத்திலும் காணப்படுகின்ற இடங்களிலெல்லாம், ''லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்" என்னும் சொற்கள் இடப்படுதல் வேண்டும்; அத்துடன்

(ஆ) “மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியம்” என்னும் சொற்களுக்குப் பதிலாக, அத்தகைய சொற்கள் முதன்மைச் சட்டவாக்கத்திலும் வேறு எழுத்திலான சட்டத்திலும் காணப்படுகின்ற இடங்களிலெல்லாம், “லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்” என்னும் சொற்கள் இடப்படுதலும் வேண்டும்.

(2) ஏதேனும் அறிவித்தலில், அறிவிப்பில், ஒப்பந்தத்தில், தொடர்பாடலில், உடன்படிக்கையில், படிவத்தில் அல்லது வேறு ஆவணத்திலுள்ள, “மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியச் சட்டம்” மற்றும் “மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்” ஆகியவற்றுக்கான குறிப்பீடொவ்வொன்றும், “லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப் பொறுப்பு நிதியச் சட்டம்” மற்றும் “லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்” ஆகியவற்றுக்கான குறிப்பீடொன்றாக வாசித்துப் பொருள் கொள்ளப்படுதல் வேண்டும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவைத் திருத்துதல்

**4.** முதன்மைச் சட்டவாக்கத்தின் 3 ஆம் பிரிவு இத்தால் பின்வருமாறு திருத்தப்படுகின்றது:-

(1) அதன் (2) ஆம் உப்பிரிவை நீக்கிவிட்டு அதற்குப் பதிலாகப் பின்வருவதனை இடுவதன் மூலமும்:-

“(2) (இதனகத்துப்பின்னர், “சபை” எனக் குறிப்பீடு செய்யப்படும்) நிதியத்தின் நம்பிக்கைப்பொறுப்பாளர் சபை, பின்வரும் உறுப்பினர்களைக் கொண்டிருத்தல் வேண்டும்:-

(அ) தாபகர்;

(ஆ) மூன்றாண்டு காலப்பகுதியொன்றுக்காக சனாதிபதியினால் நியமிக்கப்பட்ட உயர் நீதிமன்றத்தின் ஓய்வுபெற்ற

நீதிபதியொருவர்; இவர் சபையின் தவிசாளராக இருத்தல் வேண்டும்;

(இ) பின்வரும் பதவிகளை அப்போதைக்கு வகிக்கும் ஆட்கள்-

(i) உயர்கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்;

(ii) கல்வி என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்; அத்துடன்

(iii) வியாபாரம் என்னும் விடயம் குறித்தளிக்கப்பட்ட அமைச்சரின் அமைச்சுச் செயலாளர்; அத்துடன்

(ஈ) (இதனகத்துப்பின்னர், "நியமிக்கப்பட்ட உறுப்பினர்கள்" எனக் குறிப்பீடுசெய்யப்படுவோரான), ஐந்தாண்டு கொண்ட காலப்பகுதியொன்றுக்காக தாபகரால் நியமிக்கப்படும் ஆட்கள் இருவர்." ; அத்துடன்

(2) அதன் (3) ஆம் உட்பிரிவை நீக்குவதன்மூலமும்.

முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவைத் திருத்துதல்

**5**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவு, "நிதியத்தின் எல்லா அலுவலர்களும் சேவையாளர்களும்," என்னும் சொற்களுக்குப் பதிலாக, "நிதியத்தின் எல்லா அலுவலர்கள், சேவையாளர்கள் மற்றும் நம்பிக்கைப்பொறுப்பாளர்களும்," என்னும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

**6**. முதன்மைச் சட்டவாக்கத்தின் 15 ஆம் பிரிவை உடனடுத்துப் பின்வரும் புதிய பிரிவு இத்தால் உட்புகுத்தப்படுவதுடன், இது அச்சட்டவாக்கத்தின் 15அ என்னும் பிரிவாகப் பயனுறுதலும் வேண்டும்:- *முதன்மைச் சட்டவாக்கத்தில் 15அ என்னும் புதிய பிரிவை உட்புகுத்துதல்*

*“1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பகிரங்க ஆதனத்துக்கு எதிரான தவறுகள் சட்டத்தின் ஏற்பாடுகள் ஏற்புடையதாகுதல்*

15அ. நிதியத்தின் எல்லா அசைவுள்ள மற்றும் அசைவற்ற ஆதனங்களும், 1982 ஆம் ஆண்டின் 12 ஆம் இலக்க, பகிரங்க ஆதனத்துக்கெதிரான தவறுகள் சட்டத்தின் கருத்துக்குட்படவும் அத்துடன் அதன் நோக்கங்களுக்காகவும் பகிரங்க ஆதனமாக இருக்கின்றதாகக் கருதப்படுதல் வேண்டும்.”.

**7**. ஐயத்தைத் தவிர்ப்பதற்காக, ‘‘லலித் அத்துலத்முதலி மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்’’ என்பது, ‘‘மஹபொல உயர்கல்விப் புலமைப்பரிசில் நம்பிக்கைப்பொறுப்பு நிதியம்’’ என்பதற்கான அடுத்துறுநராக இருக்கின்றதாக எல்லா நோக்கங்களுக்காகவும் கருதப்படுதல் வேண்டும் என இத்தால் வெளிப்படுத்தப்படுகின்றது. *ஐயத்தைத் தவிர்த்தல்*

**8**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும். *ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில் சிங்கள உரை மேலோங்கி நிற்றல்*